தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 21-7-2014
ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

### க்ரீன் பிரைன்ஸ் மூலம் பள்ளி மாணவர்களுக்கான படைப்புத் திறமை உற்சாகமாக வெளிப்படுத்தப்பட்டது

தமிழ்நாடுவேளாண் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்பட்டுவரும் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் இளங்கலை-ஆற்றல் & சுற்றுச்சூழல் பொறியியல் மற்றும் உணவு பதன்படுத்தல் பொறியியல் துறை மாணவர்கள் "GREEN BRAINS'14" என்ற மாவட்ட அளவிளான ஓவியப்போட்டி மற்றும் மாதிரிகள் வடிவமைப்பு போட்டிகளை 20 ஜுலை 2014 அன்று நடத்தினர். இந்நிகழ்வானது "ECO FEST'14- A New Outlook for Sustenance" என நடைபெற இருக்கும் 8-வது தேசிய அளவிளான மாநாட்டின் ஒரு முன்னோட்டமாக நிகழ்த்தப்பட்டது.

ஏறத்தாழ 250 மாணவர்கள் பள்ளிகளிலிருந்தும் சுற்றுவட்டாரங்களிலிருந்தும் கலந்துகொண்டு இந்நிகழ்வினை மாபெரும் சாதனையாக அரங்கேற்றினர். இவ்விடம் மாணவர்கள் தங்களது ஆக்கமற்றும் படைப்புத்திறமைகளை உற்சாகத்துடன் வெளிக்கொணர்ந்தனர். ஓவியத்திற்கு இரண்டு பிரிவுகள், மாதிரிகளுக்கு இரண்டு பிரிவுகள் ஆக மொத்தம் நான்குபிரிவுகளில் மாணவர்கள் வகைப்படுத்தப்பட்டனர். பசுமைதாயகம் 2030, குறைக்க, மறுபயன்பாடு, மறுசுழற்சி, உலக வெப்பமயமாதல் மற்றும் காலநிலைமாற்றம் ஆகியன ஓவியப்போட்டிக்கு தலைப்புகளாகவும், பசுமை புத்தாக்கப்புனைவு, கலப்பின ஆற்றல் அமைப்பு, வீணிலிருந்து வளம் ஆகியன மாதிரிகளுக்கு தலைப்புகளாகவும் கொடுக்கப்பட்டன.

திரு.இளங்கோவன் (பல்கலைக்கழக புகைப்படகலைஞர்), பேராசிரியர். A. சுரேந்திரக்குமார் (AMRC), பேராசிரியர். பாலகிருஷ்ணன் ஆகியோர் நடுவர்களாக வந்திருந்து மாணவர்களின் படைப்புகளை மதிப்பீடு செய்து, முடிவுகளை வெளியிட்டனர்.

D. Shreya (IV-A) Einstein Public School (D1 category), Mehak Khemka (VIII-B) Bharathiya VidhyaBhavan MHSS (D2 category), K. S. Keerthiga, K. HariniSankari – Sri Avinashilingam H.S.S. for girls (M1 category), Mathiyarasi. A., Rashichka D.S–Chavara Vidhya Bavan M.H.S.S. (M2 category) ஆகியோர் வெற்றியாளர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். வேளாண் பொறியியல் துறையின் முதன்மையர், திரு.திவாகர் துரைராஜ் அவர்கள் மாணவர்களை ஆரோக்கியமான போட்டிகளுக்காக மிகுந்த எழுச்சியுடன் உற்சாகப்படுத்தினார். நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர். பாலாஜிகண்ணன் இந்நிகழ்வினை தலைமை தாங்கினார். போட்டிகளின் வாகைசூடிகள் ஆகஸ்ட் 7 அன்று நடைபெற இருக்கும் “ECO FEST’14”–ன் போது சிறப்பிக்கப்படுவார்கள்.

மக்கள் தொடர்பு அலுவலர்